முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.11.2018, வியாழக்கிழமை

**1.** **யோகராசனே ஞான ஒளி கண்ட**
**யோகியே சடாட்சர சொரூபனே**
**யுகமாற்றம் அருளவந்த தேசிகனே**
**உன் பெருமை கூறி இனிதே**

2. இனிதே ஒளி சூட்சும நூலை
இயம்பிட **விளம்பி தேளின் திங்கள்**
**கனிவுபட சஷ்டி திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 6ம் நாள் 22.11.2018, வியாழக்கிழமை)**
**கண்டுரைப்பேன் ஐயடிகள் காடவர்கோன் யானும்**

3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான நிலைகள் மக்களடைய
ஞான தேசிகனார் காட்டுகின்ற
ஞானவழிகளை ஏற்று வர வேண்டும்

4. வேண்டியே முழுமதி பூசையாம்
வினைவெல்லும் ஞானிகள் பூசையில்
தொண்டுபட மக்களெல்லாம் கலந்து
தேசிகன் ஆசி பெற வேண்டும்

5. வேண்டியே காப்பு தரும் தீட்சை
வேலவனின் சடாட்சர தீட்சை
தொண்டுபட ஏற்க வேண்டும்
திடமுற சுத்தநெறி ஏற்று

6. ஏற்று எக்காலமும் பிசகில்லா
இறைநெறி வள்ளல் ஞானநெறி
ஆற்றல்பட வணங்கித் தொடர
அருளமுது குடிலில் உண்டு வர

7. வருகவே முன்வினை குற்றமுடன்
வஞ்சம் ஏவல் பிணி சோடை
முருகப்பெருமான் அருளால் விலகும்
முழுமனதாய் சரணடைவு கொள்ள

8. கொள்ளவே நல்ஆற்றல் கூடும்
குடும்ப நலம் தேட்டு தனவளமென
அல்லலில்லாத பெருவாழ்வு திடமும்
ஆன்ம பலமும் சமத்துவ குணமும்

9. குணமும் சமதர்ம நிலை பெருகி
குவலயமே பாதுகாப்பு பெறும்
ஞானதேசிகன் கொள்கை வழி
ஞாலம் கடைத்தேற்றம் பெறும்

10. தேற்றம் தரும் ஞான குரு
தென்னகம் முதலில் உயர
ஆற்றலாய் அவதாரம் புரிந்தநல்
அருட்குரு ஆறுமுகனாரின் சூட்சும

11. சூட்சும வடிவ உயர் அவதார
சுத்தநெறி காட்டும் குருவரங்கனே
மீட்பு செய்து மக்களை காக்கும் குரு
முழுமைபட நம்பிவர சிறப்பு காணும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அநேகம் அநேகம் ஞானயோகங்கள் செய்து வெற்றி கண்டிட்ட யோகராஜனே, ஞானஒளி கண்டிட்ட ஞானயோகியே, சடாட்சரனாம் முருகப்பெருமானின் வடிவமே, யுகமாற்றத்தினை செய்திட வந்துதித்த ஞானதேசிகனே, அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 6ம் நாள் 22.11.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ஐயடிகள் காடவர்கோன் நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார்.

உலக மக்களெல்லாம் உயர்வான நிலையினை அடைந்திட ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற ஞானவழிகளை ஏற்று வாழ்வினில் கடைப்பிடித்திட வேண்டும்.

உலக நலன் கருதி பௌர்ணமிதோறும் அரங்கன், ஞானிகள் திருவடிகளைப் பற்றி நடத்துகின்ற ஞானபூஜைகளில் சித்தர்கள் சிறப்பு வழிபாடுகளில் கலந்து கொண்டு, தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் ஞானஅவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளாசிகளையும் பெற்று, அரங்கனிடத்து பயபக்தியுடன் பணிந்து, காப்பு தருகின்ற தீட்சைகளையும், சடாட்சர தீட்சைகளையும் ஏற்று, உபதேசம் ஏற்று பின்பற்றி தொண்டுகள் செய்து வருவதுடன், அரங்கன் உபதேசித்திட்ட கொல்லாநெறியாம் சுத்தநெறியில் நின்று பிறழாமல் நடந்திட வேண்டும். ஞானவீட்டின் திறவுகோலாகிய ஜீவதயவினை அடிப்படையாக கொண்ட ஜீவகாருண்ய ஞானநெறியினை இறை நெறியினை உறுதியுடன் ஆற்றலுடன் வணங்கி வாழ்வினில் தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும். ஞானிகளின் அருளாசி பெற்றிட்ட குடில் உணவினை அவரவரும் பயபக்தியுடன் உண்டு வர வேண்டும்.

இவ்விதமே அன்பரெல்லாம் செயல்பட அவர்களை பற்றியுள்ள முன்வினைக் குற்றங்கள் எல்லாம் விலகிடும், வஞ்சம் அகலும், ஏவல் விலகும், பிணி விலகும், குற்றங்கள் எல்லாம் முருகப்பெருமானின் அருளினாலே விலகிடும். ஆசான் ஆறுமுக அரங்கனே ஞானகுரு என்றே அரங்கன் திருவடிகளிலே முழுமனதாய் சரணடைந்து விட்டால் ஆற்றல் பெருகிடும், குடும்பநலம் பெருகிடும், நல்ல வருவாய் உண்டாகும், செல்வநிலை உயரும், துன்பமற்ற பெருவாழ்வும், மனோதிடமும் ஆன்மபலமும் பெருகி சமத்துவ குணமும் சமதர்மநிலையும் பெருகி இவ்வுலகமே பாதுகாப்பை பெறும்.

ஜென்மத்தைக் கடைத்தேற்றி தருகின்ற ஞானகுரு ஆறுமுக அரங்கன் தென்னகமாம் தமிழகம் உயர்வடைய ஆற்றலாய் அவதாரம் புரிந்திட்ட அருட்குரு ஆறுமுகப்பெருமானின் சூட்சும வடிவான உயர்ஞானி சுத்தநெறியை உலகிற்கு அளித்து வழிநடத்தும் ஞானகுரு அரங்கமகா தேசிகனே இவ்வுலகின் மக்களை துன்பங்களிலிருந்து மீட்டு காக்கின்ற சற்குரு ஆவார். சற்குரு ஆறுமுக அரங்கமகா தேசிகனே முழுமனதோடு நம்பிக்கையோடு ஏற்று அரங்கனை பின்தொடர்ந்து வரவர, வருகின்றவர்களின் வாழ்வு பலவிதமான சிறப்புகளையும் அடைந்து மேல்நிலையை அடைந்திடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

–சுபம்–